

# நட்பை ஒரு உயர்ந்த நிலைக்கு எடுத்து செல்லும் அறநிலையம்

## – 'ATTITUDE அறக்கட்டளை'

**புதிய விஷயங்களின் ஆரம்பம்...**

"உன்னுடைய மேன்மை உன்னிடம் இருப்பதில் இல்லை. அது நீ கொடுப்பதில் உள்ளது". 27 நண்பர்கள் கூடிய ஒரு குழு, எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல், இந்த அற்புதமான வேலையை ஆரம்பித்தார்கள். குழந்தைகளுக்கு அவர்களின் கல்வியில் உதவ ஒரு அமைப்பை உருவாக்குவதில், தங்களின் உள்ளத்தையும், உயிரையும் செலுத்துகிறார்கள். நட்பு மற்றும் சேவை ATTITUDE யால் மட்டுமே அவர்கள் இந்த அமைப்பைத் தொடங்கினர். அதற்கு அவர்கள் 'ATTITUDE அறக்கட்டளை' என்று பெயரிட்டனர்.

**கல்வி மற்றும் உயர் படிப்பில் ஏழைக் குழந்தைகளுக்கு உதவுதல் ...**

"ஒவ்வொரு குழந்தையும் கற்றுக்கொள்ளும் வாய்ப்புக்கு தகுதியானவர்". ஒரு நல்ல தரமான கல்வி, குழந்தைகள் தங்கள் முழு திறனை அடைய உதவுகிறது. இருப்பினும், லட்சக்கணக்கான குழந்தைகள் மற்றும் இளைஞர்கள், தரமான கல்வியை எட்ட இயலவில்லை. மேலும், பலர் அடிப்படை திறன்களைக் கூட கற்கவில்லை. இந்த ATTITUDE அறக்கட்டளை, குழந்தைகள் கற்றுக்கொள்ளவும், வளரவும் உதவும் சிறந்த தீர்வுகளைக் கண்டறிந்து, கோயம்புத்தூர் முழுவதும் செயல்படுகிறது. 2009 ஆம் ஆண்டில், 27 நண்பர்கள் கொண்ட குழு ஒன்று, குழந்தைகளுக்கு கல்வி வழங்க உதவ முடிவு செய்தபோது இது உருவாக்கப்பட்டது. ஒருவரால் கொடுக்கக்கூடிய ஒரே மதிப்புமிக்க சொத்து கல்வி மட்டுமே என்று அவர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் ஆரம்பத்தில் தங்கள் அருகிலுள்ள குழந்தைகளுக்கு உதவுவதன் மூலம் இந்த சேவையைத் தொடங்கினர். வெறும் நான்கு மாணவர்களிடமிருந்து தொடங்கி, பல ஆண்டுகளாக, 2,000 க்கும் மேற்பட்ட ஏழை மாணவர்களுக்கு, அவர்களால் உதவ முடிந்தது. அவர்கள் ஒவ்வொரு மாணவரையும் அவரின் பெற்றோர்களையும் தனிப்பட்ட முறையில் சந்தித்து, அவர்களின் நாட்டங்களைப் பற்றி கேட்டு, அவர்களின் கல்வி மற்றும் தொழில் வாழ்க்கையின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்வதற்கான உத்தரவாதத்தை அளிக்கிறார்கள். கொடுப்பதன் மகிழ்ச்சியை எதையும் ஒப்பிட முடியாது என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஒவ்வொரு மாணவரின் வாழ்க்கையும், மேலும் பெரிய நடவடிக்கைகளை எடுக்க அவர்களை ஊக்குவிக்கிறது. இந்த அறக்கட்டளை "விருக்ஷா" என்ற ஒரு திட்டத்தை நடத்துகிறது.
இது ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் ஒரு முறை நடத்தப்படுகிறது, அதில் அவர்கள் மாணவர்களின் செயல்திறனை அங்கீகரித்து, விருதுகள் வழங்குகிறார்கள்.

**நூலகங்கள் மற்றும் உள்கட்டமைப்பு ...**

மற்றொரு வெற்றிகரமான திட்டம் "டாக்டர் கலாம்

நூலகம்". 'ஆர்க் பவுண்டேஷன் இந்தியா' என்ற இயக்கத்துடன் இணைந்து, நகரின் நான்கு மாநகராட்சி பள்ளிகளில் நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்த நூலகத்தை அமைப்பதில் பல இளைஞர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். ஆனைகட்டியில் அமைந்துள்ள தூமனூரில் உள்ள ஒரு பழங்குடிப் பள்ளியையும் இந்த அறக்கட்டளை ஆதரித்து வருகிறது, அவர்களுக்கு கழிப்பறைகள் கட்டுவது போன்ற சுகாதார வசதிகள், மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருகிறது. அவர்கள் பல நிகழ்வுகளை நடத்தி, அந்த கிராமத்தில் உள்ள குழந்தைகளுடன் ஒரு நாள் முழுவதும் செலவிடுகிறார்கள்.

**பெண் குழந்தைக்கு அதிகாரம் ...**

ATTITUDE அறக்கட்டளை உண்மையிலேயே பெண் கல்வியை மேம்படுத்துகிறது. "ஒவ்வொரு பெண்ணும் கற்றுக்கொள்ள ஒரு வாய்ப்பு தேவை". ஒரு படித்த பெண் ஆரோக்கியமாகவும், பாதுகாப்பாகவும் வளரவும், தன் வாழ்க்கை மற்றும் எதிர்கால போக்கை தீர்மானிக்க அதிகாரம் பெற்றவளாகவும் வளர அதிக வாய்ப்புள்ளது. இந்த அறக்கட்டளை, பெண் கல்வியின் முக்கியத்துவத்தை அனைவருக்கும் புரிய வைத்து, அதன் படி அவர்களின் பிரகாசமான எதிர்காலத்திற்கான சிறந்த வாய்ப்பை வழங்குகிறது. வகுப்பறை, மரச்சாமான்கள், பெட்டிகள் மற்றும் தையல் இயந்திரங்கள் தவிர புத்தகங்கள், சீருடை, எழுது பொருட்கள், விளையாட்டு உபகரணங்கள் போன்ற அனைத்து அடிப்படைத் தேவைக்கான பொருட்களையும் அவர்கள் மாணவர்களுக்கு வழங்குகிறார்கள்.
அவர்கள் தங்கள் பள்ளியில் பல நலதிட்டங்களைக் கொண்டு வருகிறார்கள். அவற்றில் ஒன்று, சங்கரா கண் மருத்துவமனை நடத்திய இலவச கண் முகாம். மேலும், "நிர்மலிகாரணா" என்ற மற்றொரு திட்டம் செயல்படுத்தப்பட்டது. அதன் மூலம், அவர்கள் தோமணம்பாளையத்தில் உள்ள, நூறு சிறுமிகள் தங்கும் அனாதை இல்லத்திற்கான கணினி அறையை நன்கொடையாக அளித்துள்ளனர். சிறுமிகளுக்கு சுகாதார பொருட்கள் மற்றும் சூரிய நீர் வெப்பமூட்டியை வழங்கவும் அவர்கள் உதவியுள்ளனர். கூடுதலாக, அவர்கள் வேலைவாய்ப்புத் துறையுடன் இணைந்து, மாற்றுத் திறனாளிகளுக்கு வேலை வாய்ப்பு சந்தை கண்காட்சிகளை நடத்துகிறார்கள். இந்த திட்டத்திற்கு "சஹாயா" திட்டம் என்று பெயரிடப்பட்டது.
இந்த அறக்கட்டளை, 2015 முதல் வருமான வரிச் சட்டத்தின் 80 ஜி பிரிவின் கீழ், அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**சுற்றுச்சூழலையும் சக மனிதர்களையும் அக்கறையுடன் கவனித்தல் ...**

பாடத்திட்டத்தைத் தவிர, "விரிக்ஷரோபனா" என்பது மற்றொரு வெற்றிகரமான திட்டமாகும், இந்த திட்டத்தில், ஒரு அணியின் அங்கத்தினர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்களாக, பல்வேறு இடங்களில் மரங்கள் நடுவது போன்ற செயல்களில் ஈடுபடுவதன் மூலம் சமூக முன்னேற்றத்திற்காக சேவை செய்கிறார்கள்.
கோடை காலத்தில், இலவச பானம் வேண்டாம் என்று யார் சொல்வார்கள்? ஆமாம், அவர்கள் நகரம் முழுவதும் கோடையில் தாகத்தைத் தணிக்கும் மோர் வாங்குகிறார்கள். இது அவர்களின் நண்பரின் அன்பான நினைவாக தொடங்கப்பட்டது. இந்த திட்டம் "பரமராச" திட்டம் என்று அழைக்கப்பட்டது.

**மாற்றத்தை ஏற்படுத்துதல்...**

கோவையில் உள்ள மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளியில் சிறப்பு தயார்நிலை திட்ட மையம் (எஸ்ஆர்பி), 0-18 வயதுடைய மாற்றுத்திறனாளி மாணவர்களுக்காக அமைக்கப்பட்டது. அந்த மையத்தில், திறமையான உடலியக்க சிகிச்சையாளரும் மற்றும் பயிற்சி பெற்ற பயிற்றுநர்களும், மாணவர்களுக்கு கல்வி புகட்டுகிறார்கள்.
"வண்ண மலர்கள்" என்ற இந்த திட்டத்திற்காக அவர்கள், தங்கள் நீண்டகால கூட்டாளியான மிலாக்ரோன் நிறுவனத்துடன் ஒத்துழைத்துள்ளனர்.

**ஒருங்கிணைந்து நிற்கும் அவர்கள்...**

அறக்கட்டளையின் தலைவரான T.N. சுப்பிரமணியன், நிறுவனர்களிடையேயான நட்பை அனைத்து 27 முத்துக்களையும் ஒன்றாக இணைக்கும் ஒரு சரத்துடன் ஒப்பிடுகிறார். கல்வியறிவு என்பது சமூக மற்றும் மனித வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒரு அடிப்படை மனித உரிமை என்றும், வாழ்க்கையை மாற்றும் திறன் என்றும் அவர்கள் நம்புகிறார்கள். ATTITUDE அறக்கட்டளை, மாணவர்களுக்கு ஒரு பிரகாசமான எதிர்காலம் குறித்த வாக்குறுதியின் மூலம் அவர்களின் நம்பிக்கை அளவை வளர்ப்பதில் கவனம் செலுத்துகிறது. மேலும் இது மாணவர்களின் ஆளுமையை வளர்க்க உதவுகிறது.
இந்த அறக்கட்டளை, சமூகத்திற்கு தன்னார்வ சேவைகளை வழங்க மக்களை ஊக்குவிக்கின்றது.
தேவை உள்ளவர்களுக்கு உதவ கைகளை நீட்டாத மக்கள் வாழும் சகாப்தத்தில் நாம் வாழ்கிறோம். இத்தகைய பண்புகளை வளர்த்துக்கொள்வதும், சமூகத்திற்கு நமது நன்றியைக் காட்டுவதும் மிகவும் முக்கியம்.
இந்த 27 உறுப்பினர்களின் அணுகுமுறைகள் எப்போதும் சுற்றியுள்ளவர்களுக்கு நேர்மறையாகவே இருந்தன. அவர்கள் உருவாக்கும் எண்ணோட்ட அலைகள், ஒருவரை உற்சாகமடையச் செய்கின்றன.
குழந்தைகள், தாங்களாகவே ஒரு பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்ள உதவ, அவர்கள் காட்டும் ஆர்வம் முன்மாதிரியாகவும், குறிப்பிடத்தக்கதாகவும் உள்ளது. ஹென்றி ஃபோர்டு சரியாக மேற்கோள் காட்டியபடி, "ஒன்றாக வருவது ஒரு ஆரம்பம், ஒன்றாக இருப்பது முன்னேற்றம், ஒன்றாக வேலை செய்வது வெற்றி". அவர்கள் எப்போதும் நட்பை மதிக்கிறார்கள் மற்றும் அமைப்பின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் முன்னுரிமை அளிக்கிறார்கள். குழுவின் ஒவ்வொரு உறுப்பினரின் குழுப்பணி, படைப்பாற்றல், உந்துதல் மற்றும் தார்மீக ஆதரவு ஆகியவை இதன் விளைவாகும். இவ்வாறு, நட்பு என்பது, உண்மையிலே அவர்களின் வெற்றிக்கு முக்கிய காரணமாகும்.

**குடும்ப ஆதரவு ...**

நாம் வெளி உலகத்திற்கு அன்பைப் பொழிய, முதலில் நம் குடும்பத்தை முழு மனதுடன் நேசிக்கவும்,



அக்கறை காட்டவும் வேண்டும். இந்த அணியின் அனைத்து 27 உறுப்பினர்களின் குடும்பங்களும் தங்களது முழு ஆதரவைக் காட்டுகின்றன. மேலும் அவர்களுக்கு எல்லா வழிகளிலும் உதவுகின்றன. நிகழ்வுகள் மற்றும் பிரச்சாரங்களை நடத்துதல் மற்றும் அனைத்து பண்டிகைகளையும் மாணவர்களுடன் கொண்டாடுவது போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் அவர்கள் தங்களை ஈடுபடுத்துகிறார்கள். இந்த வணிகர்கள், தங்கள் தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் வேலையைத் தவிர்த்து, மாணவர்களுடன் இணைவதற்கு நேரத்தை செலவிடுவதற்கான முன்முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். மேலும், நல்ல குடிமக்களாக மாறுவதற்கு அவர்களைத் தூண்டுகிறார்கள்.
அவர்கள், இந்த மாணவர்களை தங்கள் குழந்தைகளைப் போலவே நடத்துகிறார்கள். சில மாணவர்களும் நல்ல நிறுவனங்களில் இடம் பெற்றபின் அவர்களுக்கு உதவுவதன் மூலம், தங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றனர்.

**உதாரணம் மூலம் முன்னணி ...**

ATTITUDE அறக்கட்டளை, இன்றைய இளம் பிள்ளைகள் மனங்களில் ஒரு முன்மாதிரியாக உள்ளது.
இந்தக் குழுவின் நடவடிக்கைகளை உருவாக்குவதில், அவர்கள் இளைஞர்களை ஊக்குவிக்கின்றனர்.
கோவையில், வெற்றிகரமான, இலாப நோக்கமற்ற அமைப்புகளில் ஒன்றாக, இப்போது அவர்கள் பெருமையுடன் நிற்கிறார்கள். இந்த சாதனையாளர்கள், ஒருபோதும் தங்களை விளம்பரப் படுத்திக்கொள்வதில்லை. பதிலுக்கு எதையும் ஏற்றுக்கொள்வதில்லை. அவர்கள் எடுத்த சிறிய முயற்சிப்படிகள் பலருக்கு நல்ல எதிர்காலங்களை உருவாக்கியுள்ளன. அவர்களின் அனைத்து சமூக முயற்சிகளும் எப்போதுமே ஆக்கபூர்வமாகவும் மற்றும் ஊக்கமளிக்கும் வகையிலும் அமைகின்றன.
"மற்றவர்களை உயர்த்துவதன் மூலம் நாங்கள் உயர்கிறோம்", ராபர்ட் இங்கர்சால் எழுதிய இந்த நீதிமொழி, மிகச்சரியாக 'ATTITUDE அறக்கட்டளைக்கு' பொருந்துகிறது. நல்லொழுக்கத்தை அடிப்படையாகக் கொண்ட நீடித்த நட்பை உருவாக்குவதன் மூலம், இந்த 27 நிறுவனர்கள், சிறந்த கிரேக்க தத்துவஞானி அரிஸ்டாட்டில் வரையறுத்த மூன்றாம் நிலை நட்பை நிரூபித்துள்ளனர்.